ஸ்ரீ ராமஜெயம்

**விசுவாவசு வருஷ (2025 - 2026)**

**விசேஷ தினங்களும், தேவ, பித்ரு, பூஜா ஸங்கல்பங்களும்** அடங்கிய

# பஞ்சாங்கம்

# நித்ய காம்ய மஹாயக்ஞ ஸமிதி

**(REGD.)**


பிளாட் # 22, ஆழ்வார்திருநகர் அனெக்ஸ் 2வது மெயின் ரோடு,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.
E-mail : ksmani1967@gmail.com
Website : **www.nkmysamithi.org**




**தொகுப்பாளர்**


**K.S. மணி சாஸ்திரிகள் (சென்னை)**


பஞ்சாங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு மட்டும்
இந்த கைபேசியில் தொடர்பு கொள்ளவும் +91 89390 38323

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி



**ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**
**வேதபரிபாலன ட்ரஸ்ட்**
**வேத பாடசாலை**
ஆழ்வார் திருநகர், சென்னை – 600 087.



**ரிக் வேத பாடசாலை**
135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்

---

## பாடசாலைக்கு நன்கொடை அளிப்பவர்களுக்காக பேங்க் விபரம்

**Sri KRISHNA PREMI SWAMIGAL VEDHA PARIPALANA TRUST**
**A/c No.31324634054,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

**NITYA KAMYA MAHA YAGNYA SAMITHI**
**A/c No.34747513411,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

---

**கீழே கொடுக்கப்பட்டுள்ள செல் நம்பர் வாட்ஸ்ஆப்பில் நன்கொடை அளிப்பவர்கள் கண்டிப்பாக பெயர், விலாசம், போன் நம்பர், தெரிவித்தால்தான் ரசீது அனுப்ப வசதியாக இருக்கும்.**

---

**K.S.மணிசாஸ்திரிகள்**
**9841026438**

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி



**ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**
**வேதபரிபாலன டிரஸ்ட்**
**வேத பாடசாலை**
ஆழ்வார் திருநகர், சென்னை – 600 087.



**ரிக் வேத பாடசாலை**
135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்

---

## பாடசாலைக்கு நன்கொடை அளிப்பவர்களுக்காக பேங்க் விபரம்

**Sri KRISHNA PREMI SWAMIGAL VEDHA PARIPALANA TRUST**
**A/c No.31324634054,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

**NITYA KAMYA MAHA YAGNYA SAMITHI**
**A/c No.34747513411,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

---

**கீழே கொடுக்கப்பட்டுள்ள செல் நம்பர் வாட்ஸ்ஆப்பில் நன்கொடை அளிப்பவர்கள் கண்டிப்பாக பெயர், விலாசம், போன் நம்பர், தெரிவித்தால்தான் ரசீது அனுப்ப வசதியாக இருக்கும்.**

---

**K.S.மணிசாஸ்திரிகள்**
**9841026438**




## ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம சகஸ்ர கோடி பாராயணம் அழைப்பு


ஆன்மீக அன்பர்களே! ஆசீர்வாதம்.

இப்பெழுது, உலகளவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தீர வேண்டும் என்று பிரார்த்தித்து **அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்** சார்பில் லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டு தங்களது அனைத்து பிரச்சனைகள் தீரவும், நலமுடன் வாழவும் தங்களின் பங்களிப்பான ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் தினசரி காலை மாலை செய்து 9962265105, 7299051505 என்ற இரண்டு எண்களில் வாட்சப் குரூப்பில் தங்களது பாராயணத்தை பதிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

இப்படிக்கு

**அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்,**

No.36, Vijaya Garden, Uthukadu Walajabath, Kanchipuram - 631605, Tamilnadu, India.



## ஸ்ரீ காஞ்சி ஸ்ரீஸ்ரீ பரமாச்சார்ய மஹா ஸ்வாமிகள்

இந்த லோகத்துக்கெல்லாம் காரணமாக ஒரு பரம்பொருள் இருக்கிறது. நமக்கும் அதுதான் காரணம். நம்மை அதுதான் படைத்திருக்கிறது. நாம் அல்ப ஜீவாத்மா. அது மஹத்தான பரமாத்மா. ஜீவாத்மாவாகவுள்ள நாம் மறுபடிபோய் அந்தப் பரமாத்மாவோடயே சேர்ந்துவிட வேண்டும். அப்போதுதான் ஸம்ஸாரம், சுற்றிச்சுற்றி வரும் ஜனன மரணச் சுழல், கர்மா நம்மைப் படுத்தியெடுக்கும் பாடு, இந்த மனஸின் ஓயாத உழப்பறிசல் எல்லாம் தீர்ந்து பேரின்ப நிலையை அடையலாம். ஸம்ஸாரச் சுழலிலிருந்து விடுபட்ட அந்த நிலைக்குத்தான் வீடு என்றும் மோக்ஷம் என்று பேர். அதை அடைந்துவிட்டால் அப்புறம் அழிவில்லாமல் சாவில்லாமல் சாச்வதமாக சாந்தி அநுபவிக்கலாம் என்று சொல்லவும், என்ன பண்ணினால் நாம் அப்படிப் போய்ப் பரமாத்மாவை அடையலாம் என்று வழிகாட்டிக் கொடுக்கவுமே மதம் என்பது இருக்கிறது.



## ஸ்ரீ காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

பரமாத்மாவைப் பரம கருணாமூர்த்தியாகப் பார்க்க வேண்டுமானால் அதற்கு அம்பாள் ரூபத்தைவிட வேறில்லை. குழந்தைக்குத் தாய் கன்றுக்குப் பசுவைப்போல எந்த ஜன்மத்திலும் எந்தக் காலத்திலும் எல்லாப் பிராணிகளுக்கும் தாயாராக இருக்கும் பரதேவதையின் பாதாரவிந்தத்தில் நிறைந்த பரிபூர்ண ஆனந்தம் உண்டாகிவிடும். அம்மாவாக உபாஸிக்க ஆரம்பித்தால் இப்படிப்பட்ட நிறைந்த அன்பு வெள்ளம் இயல்பாக நம்மிடமிருந்து பெருக ஆரம்பித்துவிடும். அம்பாளுடைய தியானம் இடைவிடாத தாரையாக நம்மிடமிருந்து பெருக ஆரம்பித்துவிட்டால் அதுவே ஸகல தாப சமனமான ஸமஸ்த பாப நிவாரகமான புண்ய தீர்த்தமாகும். அன்புக்கெல்லாம் ஊற்றாக இருக்கிறது அதுதான்.



## ஸ்ரீஸ்ரீ காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

பரமாத்வாவுக்கு ஸர்வப் பிரபஞ்சங்களுமே சரீரமாக இருக்கிறது. அந்த உடலுள் உயிராக தோஷத்துக்குள் ஆத்மாவாகப் பிரபஞ்சத்துக்கு உயிரையும் அறிவையும் ஸத்யத்வத்தையும், காரியங்களையும் கொடுத்துச் செய்வித்துக் கொண்டிருப்பது பரப்பிரம்ம தத்துவமே.

இங்கே சொல்வது, 'ஸௌந்தர்ய லஹரி'யின் ஆரம்ப ச்லோகத்தில் சொன்னதற்கு வித்யாஸமாகத் தோன்றுகிறது. அங்கே சக்தியில்லாவிட்டால் சிவன் அசையக்கூட மாட்டான் என்றார். அதனால் சிவன் ஜட சரீரம் என்றும் அம்பாள்தான் அதை இயக்குகிற சைதன்யமான உயிர் என்றும் ஆயிற்று. சக்தியில்லாத சிவம் சவமே என்கிறபோது உயிரில்லாத உடம்பை சொல்வதாகத்தானே ஆகிறது.



## ச்ருங்கேரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹா ஸ்வாமிகள்

'ரோகாச்ச சத்ரவ இவ ப்ரஹரந்தி தேஹம்' இந்த சரீரம் வியாதிகளால் பயமுறுத்தப்படுகிறது. வியாதிகளைக் கண்டு பயமில்லை என்று யாராலும் கூற முடியாது. வியாதிகளே இல்லாத மனிதனைப் பார்ப்பது மிகவும் துர்லபம் அப்படி இருக்கையில் மனிதனுக்கு எங்கே சாசுவதமான சுகம் இருக்கிறது? மரணம், மீண்டும் வேறொரு தாயின் வழியாகப் பிறப்பு என இப்படியே சுற்றிக் கொண்டிருந்தால் எங்கே சந்தோஷத்தை அனுபவிப்பது? இந்த பிறப்பு – முதுமை – இறப்பு என்னும் சக்கரத்தில் மீண்டும், மீண்டும் சுற்றிக் கொண்டேயிருக்கும் ஒரு வலையில் நாம் விழுந்துவிட்டோம், இதுதான் பந்தம் ஆகும். யாருக்கு இந்தப் பந்தம் இருக்கிறது? இது உடம்பிற்கா அல்லது ஆத்மாவிற்கா? இது உடம்பிற்குத்தான். ஆத்மாவிற்கு பந்தம் என்றும் இல்லை.



## ஸ்ரீஸ்ரீ அண்ணா (ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்)

யாரையும் பகவான் இயக்குவதுமில்லை. கர்மாவையோ தூண்டுவதுமில்லை. இயற்கையே அப்படி செய்கிறது. எனவே, யாருடைய பாப கர்மங்களுக்கும் அவரவர் அனுபவிக்கும் துன்பங்களுக்கும் ஈஸ்வரன் பொறுப்பாளி இல்லை. ஈஸ்வரனை குற்றம் சாட்டுவது அஞ்ஞானம். எல்லாம் ஈசன் செயல் என்பர் சிலர். நாம் நினைத்தது ஒன்று இப்போது நடப்பது ஒன்று என்று எப்போது ஆகிறதோ அப்போது இது ஈசன் செயல் என்று உணருகிறான் மனிதன். அந்த ஈசன் செயலையும் மனித முயற்சியால் மாற்றிவிடலாம் என்கின்றனர் சிலர்.

தெய்வச்செயலை தன் முயற்சியால் மாற்றுவதே ஸாமர்த்தியம். இந்த ஸாமர்த்திய முடையவனை தெய்வமும் கெடுக்க முடியாது. முயற்சியே இன்றி தெய்வமே என்று உட்கார்ந்திருப்பதும் தவறு. தெய்வத்தை மீறி எதையும் செய்துவிடுவேன் என்று முயற்சிப்பதும் தவறு. தெய்வத்தை வேண்டிக்கொண்டு தெய்வத்தின் அருளால் முயற்சிப்பவனே வெற்றி அடைவான்.